## திட்டமிட்டு சிக்னல் சேவையை நிறுத்தியதாக

# மெட்ரோ ரயில் ஊழியர்கள் 3 பேர் பணியிடை நீக்கம்

## நிர்வாகம் உத்தரவு

சென்னை, மே 2: திட்டமிட்டு ரயில் சேவையை நிறுத்தியதாக கூறி மெட்ரோ ரயில் ஊழியர்கள் 3 பேரை பணியிடை நீக்கம் செய்து மெட்ரோ ரயில் நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

தொழிற்சங்கம் அமைத்த காரணத்திற்காக மெட்ரோ ரயில் ஊழியர்கள் 8 பேரை பணி நீக்கம் செய்து மெட்ரோ ரயில் நிர்வாகம் உத்தரவிட்டது. இதை எதிர்த்து, கடந்த மூன்று நாட்களாக மெட்ரோ ரயில் ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் தொழிலாளர் நலத்துறை துணை ஆணையர் தலைமையில் பேச்சுவார்த்தை நடந்தது. இது தோல்வியில் முடிந்ததை தொடர்ந்து, நேற்று 2ம் கட்ட பேச்சுவார்த்தை நடந்தது. இதற்கிடையில் திட்டமிட்டு மெட்ரோ ரயில் சேவையை நிறுத்தியதாக கூறி 3 ஊழியர்களை பணியிடை நீக்கம் செய்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

சென்னை மெட்ரோ ரயிலின் வழித்தடம் 1 மற்றும் 2ல் உள்ள அனைத்து ரயில் போக்குவரத்துகளையும் நிர்வகிக்கும் 3 அலுவலர் அல்லாத பணியாளர்கள் கடந்த 29ம் தேதி பணி செய்யும் இடத்தை அப்படியே விட்டுவிட்டு, ரயில்களை இயக்குவதற்கான சிக்னல் அமைப்பில் தவறான கட்டளையை கொடுத்து ரயில் சேவைகளுக்கு தடங்கல் ஏற்படுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் செயல்பட்டு ரயில் சேவைகளை தடுத்துவிட்டனர்.

எனவே, வேண்டுமென்றே தவறான கட்டளையை கொடுத்து ரயில் சேவைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்துகின்ற விதத்தில் ரயில்களை நிறுத்தியதால் போக்குவரத்து கட்டுப்பாட்டாளர்கள் மனோகரன் மற்றும் பிரேம் குமார், பணிமனை கட்டுப்பாட்டாளர் சிந்தியா ரோஷன் சாம்சன் ஆகிய 3 பணியாளர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.